போற்றித் தொழ வேண்டும் என்பதற்காக, அந்த "நெஞ்சுக்கு நீதி" என்கின்ற வரலாற்றுப் புத்தகத்தை வெளியிடுகின்ற குழுவினர்கள் அவர்களாகவே அந்த ஊனமுற்றவர்கள் எந்த வகையிலே போற்றுகின்றார்கள், எண்ணுகின்றார்கள், வாழ்த்துகின்றார்கள் என்பதை தமிழகமாகவது உணரட்டும், நல்லவர்கள் இருந்தும் பலபேர் வாழ்த்துவதிலே கஞ்சத்தனம் காட்டுகின்றார்களே அந்தக் கஞ்சத்தனத்தை, அப்படி இல்லாத தன்மையிலே மாற்றிக் கொள்ளட்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அருமையான சொற்பொழிவு ஆற்றினார்கள்.

திரு. க. அறிவழகன்: இந்த உடல் ஊனமுற்றவர்கள் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் மனம் ஊனம் உற்றோரைச் சேர்த்துக் கொள்கின்ற ஒரு திட்டம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். **Mentally Retarded People**–ஐச் சேர்த்துக் கொள்கின்றார்களா?

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை: மூளை வளர்ச்சி அற்றவர்கள் இங்கே இந்தத்திட்டத்தின் மூலம் பலன் பெறுவதற்கும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. சி. வி. ராஜகோபால்: "நெஞ்சுக்கு நீதி" புத்தகத்தில் நல்ல கருத்துக்கள் இருக்கின்றன. உண்மையில்லை என்று சொல்லவில்லை. ஆனால் "நெஞ்சுக்கு நீதி" என்னும்போது, எல்லோருக்கும் நெஞ்சு இருக்கின்றது. இது சம்பந்தப்பட்டு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் நெஞ்சம் இருக்கின்றது, ஏதாவது கருத்தில் உடல் ஊனம் உற்றவர்களுக்கு அவர்கள் எழுத முடியுமா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி.எம்.அண்ணாமலை: தலைவரவர்களே, இன்றும் எழுதுகிறேன், என்றும் எழுதுவேன், எங்கும் எழுதிக்கொண்டேதான் இருக்கிறேன் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

Untouchability (*Offences*) *Act*, 1955.

*** 265** *Q.*—THAVATHIRU **KUNDRAKKUDI ADIGALAR**: **Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the number of cases filed during 1974, under the Untouchability (Offences) Act, 1955?**

1955-ஆம் ஆண்டு தீண்டாமை விலக்குச் சட்டம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

1955ஆம் ஆண்டு தீண்டாமை விலக்குச் சட்டத்தின் கீழ் 1974ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?

1975 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. க. இராசராம்: 911.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மேற்படி வழக்குகளில் இதுவரை முடிவு பெறுமல் இருக்கும் வழக்குகள் எத்தனை? முடிந்த வழக்குகள் எத்தனை?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : 1974 ஆம் ஆண்டு அளவில் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகள் 954. நீதி மன்றத்திற்கு எடுத்துச்செல்லப்பட்ட வழக்குகள் 911. ரெபர் செய்யப்பட்ட வழக்குகள் 24, புலன் ஆய்வில் உள்ள வழக்குகள் 19, நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட வழக்குகளில் முடிந்த வழக்குகள் 514, விடுதலையில் முடிந்த வழக்குகள் 97, கம்பௌண்டிங்கில் முடிந்த வழக்குகள் 132. 31-12-1974 நீதிமன்ற நிலுவையில் உள்ள வழக்குகள் 166.

திரு. ஜி. சுவாமிநாதன்: நீதி மன்றத்திற்குப் போன 911 வழக்குகளில் தண்டனைக்கு உள்ளானவர்கள் 50 சதவிகிதம் பேர் என்றுதான் இருக்கின்றது. இப்படிக் குறைவான வழக்குகள் தண்டனை அடைவதற்கு ஏதாவது காரணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இதற்கு ஒரு காரணமும் இல்லை. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், ஊர்ப் பெரியவர்கள் இப்படிப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதி மன்றத்திற்குச் செல்கின்ற நேரத்தில், இவர்களே சமாதானம் செய்து மேலும் அப்படிப்பட்ட குறைகள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்கின்றோம் என்று அவர்களே பொறுப்பை ஏற்றுக் கொண்டு சமாதானம் செய்துவிடுவது தான் காரணம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த இளையபெருமாள் கமிட்டியின் அறிக்கையின் கீழ் மாநில, மாவட்ட அளவிலே ஒரு போர்டு அமைத்து இது போன்ற அரிஜனங்களின் நலன்களைப் பற்றி ஆராய வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதைப் பற்றி ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். அந்த போர்டுகள் அமைக்கப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : அந்த போர்ட் அடிப்படையிலே வேலை செய்ததன் காரணமாகத்தான் இப்போது நாம் இங்கே சொன்னது. தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்காக என்று 6 மாவட்டங்களில் இயங்கும் சிறப்பு காவல் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. கோயம்பத்தூர், மதுரை, தென் ஆற்காடு, திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் இப்போது அமைக்கப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

(பிற்பகல் 4–40)

திரு. ஜி. சுவாமிநாதன் : இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னல் வைக்கத்திலே நடந்த சத்தியாக்கிரகத்தையொட்டி "பொன் விழா" கொண்டாட நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் கேரளா சென்றிருக்கி

றூர்கள். நம்முடைய தமிழ் நாட்டிலே தீண்டாமை ஒழிப்பு பல காலமாக நடந்து வருகிறது. அதே போன்ற பொன் விழா நிகழ்ச்சி நடத்த நம்முடைய அரசு உத்தேசித்திருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : அதே போன்ற நிகழ்ச்சியை நடத்த வேண்டுமென்றுதான் இப்பொழுது முடிவெடுத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்பொழுது தேதி கொடுக்கிறார்களோ அப்போழுது அதை நடத்தி விடலாம்.

Subordinate Judge's Court at Namakkal.

* @255 *Q*.—THIRU A. BALASUBRAMANIAM: **Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :**

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open a Subordinate Judge's Court at Namakkal, Salem District ; and

(*b*) if so, when?

நாமக்கல்லில் சார்பு நீதிபதி நீதி மன்றம்.

திரு. ஏ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சேலம் மாவட்டம், நாமக்கல்லில், சார்பு நீதிபதி நீதி மன்றம் ஏற்படுத்துவது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ)and (இ) நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழு நாமக்கல்லில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க பரிவுரை செய்து உள்ளது. 1975ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் அக்குழுவின் பரிவுரைகளை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் ஐந்தாண்டு காலத்தில் ஒவ்வொரு பரிந்துரையின் முக்கியத்துவத்தையும், அரசின் நிதி நிலையையும் கருத்தில் கொண்டு படிப்படியாக செயல்படுத்தப்படும்.

திரு. ஏ. பாலசுப்ரமணியம் : அது எப்பொழுது கொண்டு வரப்படும் என்றுதான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இது குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழகத்தின் முதல்வர் அவர்கள் அங்கு வந்திருந்த

@ 19-4-1975 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.